
# வரலாறு படைத்த தமிழ்ப் புதினங்கள்




**தமிழ் ஐயா வெளியீட்டகம்**

ஔவைக்கோட்டம், திருவையாறு - 613 204

தஞ்சாவூர் மாவட்டம்.

## நூல் விவர அட்டவணை

| | | |
|---|---|---|
| தலைப்பு | : | வரலாறு படைத்த தமிழ்ப்புதினங்கள் |
| வகை | : | கதைத் தமிழ் ஆய்வு |
| பதிப்பாசிரியர் | : | க. கண்ணகி (பேசி : 94867 42503) |
| முதல்பதிப்பு | : | திருவள்ளுவராண்டு 2046 (சூலை, 2015) |
| பதிப்புரிமை | : | தமிழ் ஐயா வெளியீட்டகம், திருவையாறு |
| நூல் அளவு | : | டெம்மி 1x8 |
| I.S.B.N. எண் | : | 978-81-930633-0-09 (V-II) |
| எழுத்து அளவு | : | 11 |
| பக்கங்கள் | : | 512 |
| படிகள் | : | 500 |
| கட்டுமானம் | : | சாதாரணம் |
| விலை | : | ரூ. 500/- |
| கணினி அச்சு | : | செ.தீபா (கிரியேட்டர் கிராபிக்சு) சிவகாசி |
| அச்சாக்கம் | : | செல்வவிநாயகம் அச்சகம், சென்னை. |

கோவை கொங்கு நாடு கலை அறிவியல் கல்லூரியுடன் இணைந்து திருவையாறு தமிழ் ஐயா கல்விக் கழகம 11-07-2015 அன்று நடத்திய அனைத்துலக அளவிலான கதைத் தமிழ் 13- ஆவது ஆய்வு மாநாட்டுக் கருத்தரங்கில் படித்தளிக்கப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பு.

75. மறுபக்கம் புதினத்தில் பண்பாடும் பண்பாட்டுச் சிதைவுகளும் — முனைவர் கு. மணிகண்டன் 401

76. குறிஞ்சித்தேன் நாவல் காட்டும் சமூகப் பண்பாட்டுக் கூறுகள — முனைவர் மு. ஞானத்தாய் 407

77. லெட்சுமியின் படைப்புகளில் உழைக்கும் பெண்கள் — வி.எசு.விசயலெட்சுமி 413

78. புதினங்களில் போராட்ட உணர்வுகள் — முனைவர் மு.புவனேசுவரி 419

79. தண்ணீர் நாவல் மொழிபெயர்ப்பு தமிழில் இருந்து இந்தி மொழியில் உருவான சவால்கள். — முனைவர் கே.எசு.பிரணதார்த்திகரன் 424

80. பொன்னீலனின் மறுபக்கம் நாவல் வரலாறும் பின்னணியும் — முனைவர் நீ.பகவதியம்மன் 429

81. அறிஞர் மு.வ. புதினங்களில் குமுகச் சிந்தனைகள் — முனைவர் கடலூர் மணிமாறன் 436

82. தோல் நாவலில் சமூகம் சார்ந்த பிரச்சனைகள் — செ. பாத்திமா 442

83. சிவசங்கரியின் நான் நானாக நாவலில் பெண்ணியம் — முனைவர் இர.மங்கையர்க்கரசி 447

84. சோதிர்லதா கிரிசாவின் புதிய யுகம் பிறக்கட்டும் நாவலில் பெண்ணியச் சிக்கல்கள் — பா. திருமகள் 453

85. கல்கியின் பார்த்திபன் கனவில் தமிழரின் வாழ்வியல் கூறுகள் — க. மணிமேகலை 461

86. குயிலி இராசேசுவரியின் புதினம் வாழ்க்கைப் பின்னல் பல்வேறு கோணங்களில் பற்றிய ஆய்வு — சு. இரசனிரசத்து 467

87. சு. வேணுகோபாலின் கதைக்களம் — முனைவர் மொ.இரவிக்குமார் 473

88. நிலம் என்னும் நல்லாளில் பாத்திரப்படைப்பு — முனைவர் ந.இரஞ்சன் 480

89. அவனது நினைவுகள் புதினத்தில் வாழ்க்கைப் போராட்டம் — அர.மரகதவள்ளி 485

# 88. நிலம் என்னும் நல்லாளில் பாத்திரப்படைப்பு

**முனைவர் ந.இரஞ்சன்**
*உதவிப்பேராசிரியர்*
*தமிழ்த்துறை*
*கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி*
*கோயம்புத்தூர்*

## முன்னுரை

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு" (குறள்)

மண்ணுக்கும், மக்களுக்கும் இருக்கின்ற உன்னதமான உறவுநிலையைப் படம்பிடித்துக் காட்டும் படைப்புகள் இன்றைய காலத்தில் குறைந்து வருகின்றன. மண்ணோடு உறவாடி, மல்லுக்கட்டி, போராடி மண்ணை மட்டுமே நம்பி வாழ்ந்து வருகின்ற குடும்பத்திலிருந்து ஒருவன் தன் மண்ணை விட்டு விலகிச் சென்று படுகின்ற துயரங்களைப் படம்பிடித்துக் காட்டுகின்ற நிலம் என்னும் நல்லாள் என்ற புதினத்தை சு.வேணுகோபால் படைத்துள்ளார். இந்தப் புதினத்தில் இடம்பெற்றுள்ள முதன்மைக் கதாபாத்திரங்களைப் பற்றி ஆராய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

## நிலம் என்னும் நல்லாள்

தமிழர்களின் வாழ்வியலை முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் கொண்டு படம்பிடித்துக் காட்டும் இலக்கியமாக இன்றையக் காலத்தில் இருப்பது புதினம். கவிதை மக்களின் அக, புற வாழ்க்கையைச் சுருக்கமாகப் பதிவு செய்கிறது. சிறுகதையோ சுருக்கத்திலிருந்து விலகிக் கொஞ்சம் விளக்கமாகப் பதிவு செய்கிறது. அந்த வகையில் இன்றையக் காலத்தில் பல்வேறு புதினங்கள் ஏதேனும் ஒரு நிலத்தின் தன்மையையும் அந்நிலத்தில் வாழும் மக்களின் நிலைகளையும் பதிவுசெய்கின்றன என்பதை அறியலாம். சங்கம் என்ற புதினம் குறிஞ்சி நிலத்தில் வாழும் மக்களின் வாழ்க்கையைப் பதிவுசெய்தள்ளது. கூளமாதாரியோ முல்லை நில மக்களையும், கொற்கை நெய்தல் நில மாந்தர்களையும் நெடுங்குருதி பாலை நிலை மக்களின் வாழ்வியலையும் பதிவு செய்தள்ளமை போல நிலம் என்னும் நல்லாளோ மருதம் சார்ந்த மக்களின்